DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 150/2024 |
| Deposition of Witness for | : | P.W. 16 |
| Name | : | **மருத்துவர். ஹரிஹரன்** |
| Father's Name | : | **முருகேசன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் 1வது எதிரி சிறையில் உள்ளார். 3வது எதிரி ஆஜர். 2-ம் எதிரி ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 26.03.2026

**(சாட்சியம் காணொளி வாயிலாக பதிவு செய்யப்படுகிறது)**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பயிற்சி பெற்று வருகிறேன். கடந்த 26.01.2024ம் தேதி நான் காளையார்கோவில் அரசு மருத்துவமனையில் பணி மருத்துவராக பணியில் இருந்தபோது அன்று காலை 8.30 மணியளவில் 72 வயது மதிக்கதக்க பெண் உபகாரமேரி க.பெ.சின்னப்பன், பள்ளிதம்பம் என்பவர் அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக அவரது மகளால் அழைத்து வரப்பட்டார். அவரை நான் பரிசோதனை செய்தபோது சுயநினைவுடன் இருந்தார்.

2. அவர் தன்னை அடையாளம் தெரியாத நபர் அவரது வீட்டில் வைத்து அருவாள்/Knife ஆல் கொண்டு தாக்கியதில் காயம்பட்டதாக தெரிவித்தார். காயம்பட்ட நேரம் தனக்கு தெரியவில்லை என்றும் தெரிவித்தார். அவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தன. 1) இடது பக்க தலையில் Parietal Region-ல் வெட்டுக்காயம் 2cm x 4cm அளவில் காணப்பட்டது. 2) இடது காதின் பின்புறம் ஒரு வெட்டுக்காயம் 2cm x 4cm அளவில் காணப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக நான் மருத்துவ முதலுதவி சிகிச்சை செய்து மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். உபகாரமேரி என்பவருக்கு நான் வழங்கிய **விபத்து பதிவேட்டு நகல் அ.த.சா.ஆ.31** ஆகும்.

3. அதே சம்பவத்தில் காயம்பட்ட மற்றொரு நபரான 70 வயது ஆண் சின்னப்பன் த.பெ.சவரிமுத்து, பள்ளித்தம்பம் என்பவரை அவரது மகளால் அன்றைய தினம் காலை 8.45 மணியளவில் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். காயம்பட்ட நபர் முழுமையான சுயநினைவுடன் இல்லாமல் இருந்தார். அவரை பரிசோதனை செய்தபோது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது. அவருக்கு இடது மற்றும் வலது முன் நெற்றியில் ஒரு வெட்டுக்காயம் அவரது புருவத்திற்கு அருகில் காணப்பட்டது. வலது முன் பக்க நெற்றியில் 1cm x 2cm அளவில் காயம் காணப்பட்டது, இடது முன் பக்க நெற்றியில் 2cm x 4cm அளவில் காயம் காணப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக நான் முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். காயம்பட்ட உபகாரமேரி மற்றும் சின்னப்பன் ஆகியோருக்கு ஏற்பட்ட காயங்கள் ரத்தம் வழிந்தோடிய நிலையில் காணப்பட்டது. சின்னப்பன் என்பவருக்கு நான் வழங்கிய **விபத்து பதிவேட்டு நகல் அ.த.சா.ஆ.32** ஆகும்.

4. மேற்கூறிய காயங்கள் அ.த.பொ.சா. 3 கடப்பாரையால் ஒரு பகுதி கூர்மையாகவும், ஒரு பகுதி தட்டையாகவும் இருக்கும் ஆயுதத்தால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புண்டு. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை

விசாரித்தார்கள்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

அ.த.சா.ஆ.32 விபத்து பதிவேட்டு நகலில் அவர் தன்னை அடையாளம் தெரியாத நபர் அருவாளால் தாக்கியதாக தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். இந்த விபரங்களை சொல்லும் அளவிற்கு சுயநினைவுடன் இருந்தாரா என்றால் இருந்தார். உபகாரமேரி மற்றும் சின்னப்பனுக்கு ஏற்பட்ட காயங்கள் வெவ்வேறு ஆயுதங்களால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. காயம்பட்ட நபர்களை நான் பார்த்த நேரத்திலிருந்து 1 முதல் ஒன்றரை மணி நேரத்திற்குள் காயம் ஏற்பட்டிருக்க வாய்புள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன நபர்களுக்கு ஏற்பட்ட காயமானது சிதைவு காயம் என்று குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் Lacerated injury என்று குறிப்பிட்டிருக்கிறேன். Cut Injury என்று குறிப்பிட்டிருக்கிறேனா என்றால் இல்லை Lacerated injury என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

**2 வது மற்றும் 3 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:** இல்லை

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.26 10:38:13 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**